-8-1991

## ★ 'ராவய' சிங்கள பத்திரிகை காரியாலயம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 26 இதழ்: 181
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11-8-1991

## பொலிஸாரால் முற்றுகை

(கொழும்பு)
''ராவய'' சிங்களப் பத்திரிகைக் காரியாலயத்தை இரகசியப் பொலிசார் முற்றுகையிட்டு, சோதனையிட்டதையும் அப்பத்திரிகையின் ஆசிரியரை பொலிசார் விசாரணை
(4ம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு ஆதரவுதேடும் 'கமாண்டோ தியசேன'

(கொழும்பு)
வடபகுதியில் போரிடும் படையினருக்கு ஆதரவாக தென்பகுதியில் 'கமாண்டோ தியசேன' என்ற நாடகம் காண்பிக்கப்பட்டு வருகிறது. படையினர் வடக்கு-கிழக்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிட்டு விவகாரம் இந்தியா மறுப்பு

(லண்டன்)
திரு. கிட்டுவை பிரிட்டனிலிருந்து வெளியேற்ற அந்நாட்டு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைக்கும் இந்தியாவிற்கும் எதுவித தொடர்புமில்லை யென லண்டனிலுள்ள இந்திய தூதரகம் கூறியுள்ளது.
[4-ம் பக்கம் பார்க்க]

கஸ்தூரார் வீதி நூலகம்

# இலங்கைப் பிரச்சனை தீர்வை துரிதமாக்க இந்தியா முயற்சி

## விஷேட குழு வருகிறது

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னை தீர்வை துரிதப்படுத்த இந்திய அரசு முயற்சித்து வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக இந்தியக் குழு ஒன்று கொழும்பு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் உள்நாட்டுப் போர் இந்தியாவுக்குதொடர்ந்தும் பெரும் நெருக்கடியைக் கொடுத்துவருவதுடன், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளாலும் தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் வற்புறுத்தப்பட்டாராம்.

மேலும் இப்பிரச்னையை சுமுகமாக இலங்கையின் ஒருமைப்பாடு குலையாத விதத்தில் தீர்க்க இந்தியா முயற்சித்து வருவதாகவும் இதற்கென விரைவில் விசேட குழு ஒன்று வரவுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
(4ம் பக்கம் பார்க்க)

## புரன்ட்லைன்-ராம் கொழும்பு விஜயம்

[கொழும்பு]
இந்தியப் பத்திரிகையாளரும், 'புரன்ட் லைன்' ஆசிரியருமான திரு என். ராம் முக்கிய விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்தார்.

திரு. ராம் ஜனதிபதி, மற்றும் அமைச்சர்களான திரு. எஸ். தொண்டமான், ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக முக்கிய காரணஸ்தராக இருந்த இவர்
(4-ம் பக்கம் பார்க்க)

## 14 படையினர் பலி 62 பேர் காயம்

[கொழும்பு]
ஆனையிறவு முகாம் பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் கடும் மோதலில் கடந்த இரு தினங்களில் 14 படையினர் கொல்லப்பட்டும், 62 படையினர் படுகாயமடைந்துமுள்ளதாக ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் பதினொரு படையினர் கொல்லப்பட்டு, 50 பேர் படுகாயமடைந்தனர். நேற்று 3 படையினர் கொல்லப்பட்டு 12 பேர் படுகாயமடைந்தனர்.

ஆனையிறவு முகாமினுள் படையினர் பிரவேசித்த பின் இடம்பெற்ற மோதலில் அரசு
[4-ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் 8நாள் போரில் 25 படையினரை காணவில்லை

[கொழும்பு]
ஆனையிறவு முகாமை மீட்க வந்த படையினரில் 25 படையினர் காணாமல் போயுள்ளனர்: சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் 29 படையினரின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதைவிட இந்த 25 படையினரும் காணாமல் போயுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

மேற்படி 25 படையினரும் கடந்த மாதம் 18-ம் திகதிக்கும் 26-ம் திகதிக்கும் இடையில் காணாமல் அல்லது வழி தவறிப் போயிருக்கலாமென இந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மோதலில் 16-ம் திகதியிலிருந்து 26 ம்திகதி வரையிலான போரில் 500 படையினர் மிகக் கடுமையான காயங்களுக்குள்ளானதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.
(153-சி)

## இந்தியாவுடன்வர்த்தக உறவு இலங்கைக்கு 25 கோடி ரூபா நஷ்டம்

(கொழும்பு)
இந்தியாவுடனன வர்த்தக தொடர்பில் இலங்கைக்கு சுமார் 25கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை அண்மையில் இலங்கைக்கு விஜயம்செய்த இந்திய வர்த்தக குழுவிடம் வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் புள்ளிவிபரங்களுடன்
(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கடும் தாக்குதலில் தினமும்படையினர்உயிரிழப்பு

[கொழும்பு]
ஆனையிறவு முகாமினுள் தங்கியுள்ள படையினருக்கு தினமும் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுவருகிறது. படையினர் புலிகளின் கடும் தாக்குதலை எந்நேரமும் சமாளிக்கவேண்டியுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரவலாக நின்ற புலிகள் முகாமின் தென்பகுதியில் ஒன்றிணைந்து முறையாக அமைக்கப்பெற்ற பாதுகாப்பான
(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். வந்த உணவுப் பொருட்களை அரசு தடுத்து நிறுத்தியது

(கொழும்பு)
கனேடிய தொண்டர் ஸ்தாபனம் ஒன்று யாழ்ப்பாண மக்களுக்கென அனுப்பிய 20,000 டாலர் பெறுமதியான உணவுப் பொருட்களை இலங்கை அரசு தடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டர்நிறுவனங்கள்மூலம் இதனை வழங்க கனேடிய தூத
[4-ம் பக்கம் பார்க்க]

## மலையகத்தில் புலிகள்; அரசு அச்சம்

(கொழும்பு)
மலையகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுவருவதாக அரசு பெரும் அச்சமடைந்துள்ளது.

மலையகத்தில் அண்மையில் கொழும்பு குண்டுவெடிப்பு தொடர்பாக 15 தோட்டத் தொழிலாளர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
[4ம் பக்கம் பார்க்க]

## மாலைதீவு அதிபரின் இலங்கை விஜயம் ரத்து

(மாலே)
மாலைதீவு ஜனதிபதி அப்துல் கையூமின் இலங்கை விஜயம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

நாளை திங்கட்கிழமை 'சார்க்' மாநாடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த ஜனதிபதி கையூம் கொழும்பு வரவிருந்தது குறிப்பிடத்தக்கது (மா)

## மன்னிப்புச்சபைமீது பிரட்மன் பாய்ச்சல்

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் சுமார் 10, 000 தமிழர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்துள்ள திரு. பிரட்மன் வீரக்கோன் இது மிகைப்படுத்திய தகவல் என மன்னிப்புச்சபை மீது
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தரன் ஸ்ருடியோ

பாஸ்போர்ட். அடையாள அட்டை - என்லாஜ்மென்ட். கலர்ப்படங்களுக்கும், றபர் சீல்கள், விளம்பர போட்கள், பிளாஸ்ரிக், ஸ்ரிக்கர்கள், டிசைன்கள் ஓவிய வேலைகட்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5065)

## வியாழ மாற்றம்

வியாழமாற்றமும், ஸ்ரீரமண பகவான்-ஸ்ரீ சத்ய சாயிபாபா அவதார புருஷர்களின் ஒரே விதமான ஜெனனகால ஜாதகங்களும், விலை 6/50 எங்கும் விற்பனையாகின்றன. கனகா ரேடர்ஸ் திருநெல்வேலி நூலாசிரியர் Prof. சத்தியதாஸன் சித்தன்கேணி. (சி-5084)

## OPTICIANS

For correct dispensing of Doctors' priscription Visit Eric Ganesh Opticians, 566, Hospital Road, Jaffna. Imported frames, lenses, sunglasses and photogray day & night glasses are available for selection. (This establishment provides experienced services of former employees of Eric Rajapakse & Co.)

[C-5038]

## கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 24வருட அனுபவமுடைய ஆசிரியரினுல் 40 மணித்தியாலத்திற்குள் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி சுண்டிக்குளி. [சி 5097]

## காணி உறுதி பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் காணி பதிவகத்தில் 1990 ஜனவரி தொடக்கம் 1991 ஜூலை 31 வரை எழுதப்பட்ட உறுதிகள் பதிவிற்காக ஏற்றுக்கொள்ளப்படவிருக்கிறது.

இதேவேளை 1989-ம் ஆண்டு எழுதப்பட்ட உறுதிகள் காணி பதிவகத்தில் பதியப்பட்டு பெருமளவில் தேங்கி கிடக்கின்றன. நொத்தாரிசுமார் காணி பதிவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிருர்கள் (153)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# வண்ணை சிவன் கோவில் இன்று ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் இன்று 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை 12ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு திருவூஞ்சல் விழாவும் நடைபெறும்.

★

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய இரதோற்சவம் இன்று ஞாயிறு காலையும், தீர்த்தோற்சவம் நாளை திங்கட்கிழமையும் நடைபெறும்.

★

[கொழும்புத்துறை]

யாழ். நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீஇராசராசேஸ் பேச்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று 11ம் திகதி நடைபெறும். நாளை 12ம்திகதி திங்கட்கிழமை காலை தீர்த்த உற்சவம் இடம்பெறும்

[154]

## UNIVERSITY OF JAFFNA.

## Tender for Furniture

Sealed tenders are invited for the following.

1. Glass Fronted Almirah - 12 nos
2. Book Shelfs Steel - 24 nos
3. Book Shelfs Timber - 24 nos
4. Office Table - 02 nos
5. Executive Cushioned Chairs - 06 nos
6. Chair Steel Framed - 12 nos
7. Executive Table - 03 nos
8. Filling Cabinets - 04 nos
9. Steel Cuboard - 02 nos
10. Lecture Hall Chairs - 100 nos

Drawings and relevant details except Item 8&9 be obtained from the Bursar, University of Jaffna on 15-08-1991 and 16-08-1991 during office hours on payment of Rs. 200/, as non - refundable tender deposit, and refundable deposit of Rs.5000/.

Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before 10-00 a. m. on 21-08-1991, indicating No: UJ/PO/T/41/91 on the left hand corner of the envelope.

The tenders will be opended on the same day at 10-30 a. m.

Registrar.

(A-1488)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பட்டமளிப்பு சான்றிதழ் பெறுதல்

06 - 07 - 91 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு வைபவ சான்றிதழை பெறத்தவறிய பட்டதாரிகள் உடனடியாக அவற்றை யாழ். பல்கலைக்கழகத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும் அல்லது அவருக்குரியவர் தகுந்த அத்தாட்சிக் கடிதத்துடன் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்.

[எ-1490]

## இலவச விநியோகம்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் தோப்புக்காட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள ஞானசம்பந்த வித்தியாசாலை மாணவர்களுக்கு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் கொப்பி, பென்சில், பேனு முதலிய பாடசாலைப் பொருட்களை இலவசமாக வழங்கியுள்ளனர்.

சித்தன்கேணி பிளவத்தை அ. மி. த. க. பாடசாலையில் வைத்து இந்தப் பொருட்கள் கடந்த வாரம் இலவசமாக வழங்கப்பட்டன. (139)

## போர்க்கால கருத்தரங்கு

[கொழும்புத்துறை]

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர் பிரதேச வட்டவை ரீதியாக நடைபெறவுள்ள போர்க்கால கருத்தரங்கு இன்று 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8-00 மணிக்கு கல்வியங்காடு சந்தியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப்பிரமுகர்கள் திருவாளர்கள் தினீகாந்தன், புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள். (154)

## பரிசாரகர்கள் நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் ஆண், பெண் பரிசாரகர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது

இப்பதவிக்கு விண்ணப்பித்த யாழ். சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த சிற்றூழியர்களுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. (72)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன் சுப்பிரமணியம் பத்மகிரிதரன் [கிரி]

மலர்வு: 16-08-1971 உதிர்வு: 28-06-1991

பண்பின் உறைவிடமே பத்மகிரிதரனே
அன்புத் தம்பீ அணையா விளக்கே
என்று நீ வருவாயோ நம் துயர்தீர
நின் பிரிவால் வாடுகிருேம் தம்பி.

உமது பிரிவால் துயருறும்:
பெற்றேர், சகோதரர், உறவினர்,

மாகியப்பிட்டி. (சி-5079)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



கா. கணபதிப்பிள்ளை வியாகரத்தினம்

(ஓய்வு பெற்ற பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரர் மண்டைதீவு)

தோற்றம்: 1-7-1917 மறைவு: 12-7-1991

எங்கு பார்த்தாலும் உங்கள் உருவம்
எங்கு போனுலும் உங்கள் காட்சி
மறக்க முடியாத சாதனைகள் பல
நிலைத்து நிற்கின்றதே போதனைகள் பல

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம். உங்கள் பிரிவால் கண்ணீர் சொரியும்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி, மண்டைதீவு. (சி-5099)

வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்!

துரித தபால்சேவைக்கு DHL

DHL WORLDWIDE EXPRESS

C/o, Cosmos Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.

(ஏ-1489)

# சர்வதேச நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றின் செயல்பாட்டை நிறுத்த முயற்சி

## வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மகஜர்

(நேற்றைய தொடர்ச்சி)

அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அவர்களின் செயல்பாட்டை நிறுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கையேயாகும்.

27-04-91ல் வவுனியாவில் வைத்து ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய வாகனங்கள் மீது தாக்குதல். (இவர்கள் 5-9-91ம் திகதி முதல் மடுத் தேவாலய அகதி முகாமைப் பராமரித்தவர்கள்

3-5-91ல் எம். எஸ். எவ். குழுவினர் மீது வவுனியாவில் தாக்குதல் நடைபெற்றது. இவ் வைத்தியக் குழுவினர் சேவை இப்பகுதிகளில் மிகவும் அவசியமானது. இவர்கள் ஆட்சேபனைக்காகத் தமது சேவையை இடைநிறுத்தி மீண்டும் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர்.

26-6 90 பலாலியிலும், ஜனவரி 91 கிளிநொச்சியிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மீதும் தாக்குதல்கள் நடைபெற்றன. இந்த நடவடிக்கைக்கு ஆயுதப்படைகளின் நலன்களையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனிக்கவேண்டுமென்று அழுத்தம் கொடுக்க அரசு விரும்பியதே காரணமாகும்.

### மனித உரிமைகள் மீறல்கள்

கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுக்களும், தூர இடங்களில் அமைந்துள்ள முகாம்களில் இருந்து ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களும், ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்றும் காயப்படுத்தியும், பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை சேதப்படுத்தியும் வந்துள்ளன. அப்படியிருந்தும் உலகிற்கு தாம் சரியான இலக்குகளையே தாக்கிவருவதாகக் கூறிவருகிறது. துரதிர்ஷ்டவசமாக பக்கசார்பற்ற நிறுவனங்களோ, சர்வதேச நிறுவனங்களோ இவற்றை விசாரிக்க முன்வரவில்லை.

ஜே. வி. பி: இயக்கம் என்ற போர்வையில் 60,000க்கு மேற்பட்ட சிங்களப் பொது மக்களை மர்மக் குழுக்களாகப் பிரித்து கொன்றுள்ளனர், இங்ஙனம் கொலைசெய்யப்பட்டவர்களின் உடல்களை அநாமதேயமாக அடையாளம் தெரியாதவகையில் வெட்டி வீதிகளில் போட்டுள்ளனர். சடலங்களை எரியூட்டி கருகிய நிலையில் அந்தந்த இடங்களில் இட்டுச் செல்கின்றனர். இது பலருக்கு அறிந்த உண்மையாகவே உள்ளது. மனித உரிமை இயக்கத்தை சாடிவருகின்றனர். சர்வதேச மன்னிப்புச்சபை அலுவலகத்தை மூடிவிட்டனர்.

இதை ஒத்த நடவடிக்கைகள் அரச கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் பிரதேசங்களில் நடப்பதையும் உணர முடிகிறது. தனிமையில் கைது செய்யப்படுபவர்கள் அழித்தொழிக்கப்படுவதாக அஞ்சப்படுகிறது. இதன்படி தற்போது நாம் சமர்ப்பிக்கும் தொகையை விட இறந்த, காணமல் போனவர்களின் தொகை அதிகரிக்கவும் கூடும்.

வவுனியாவிலுள்ள இராணுவத்தின் காவலரண்களுக்கு ஊடாகச் செல்லும் பல பொது மக்களை, இம்சைப்படுத்தியுள்ளனர். அடித்தும், சுட்டும் கொன்றுமுள்ளனர். வவுனியாவிலே மிதிவெடிகளினூடாகப் பொதுமக்களை நடந்து செல்ல நிர்ப்பந்திக்கின்றனர். இதனால் பலர் காயப்பட்டும், இறந்தும் உள்ளனர். திருகோணமலையில் ஒரு சிறுவனை மிதிவெடி மீது நடக்க வைத்ததனால் அச்சிறுவன் பலத்த காயமடைந்தான்.

வழியில் காணுபவர்களை ஏற்றிச் செல்வதும், சுற்றிவளைப்பின் போது பலரைக் கைது செய்வதும் வழமை. ஆயினும் தேடிச் செல்லும் ஆட்களுக்கு விபரங்களை மறுப்பதும், ஏதாவதொரு இராணுவ நடவடிக்கையின் போது அவர்கள் இறந்து விட்டதாகக் கூறுவதும் வழமையாகி விட்டது. வடபகுதியிலும் இராணுவ ரோந்து நடைபெற்ற இடங்களில் எழுவைதீவு, காங்கேசன்துறை, காரைநகர் போன்ற பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமானோர் காணமல் போயுள்ளனர்.

25-06-1991 ம் திகதி கொக்கட்டிச்சோலையிலே நூற்றுக்கும் மேற்பட்டோர் இராணுவ அடாவடித் தனங்களால் கொரமாகக் கொல்லப்பட்டனர். பலர் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டுப் பின் கொல்லப்பட்டனர். இவ்விடயம் அம்பலமானதும் அரச உயர் தலைவர்கள் அவ்விடம் சென்று சாதாரண நீதி விசாரணைக்கு மேல் கமிஷன் அமைப்பதாகக் கூறினர்.

யாழ். மாவட்டத்தில் சனத்தொகை 8,50 000. கிழக்கிலிருந்து வந்த (இடம் பெயர்ந்த மக்களின் அண்ணளவு) 1 50,000. யாழ் மாவட்டத்தில் இன்றுள்ளபடி 10.00,000 பேர் உள்ளனர். (தொடரும்)

(1948ன பின் இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அட்டூழியங்கள். அநீதிகளை சுட்டிக்காட்டி யாழ்ப்பாணம் 'கிறிஸ்தவ பொது நிலையினர் முன்னணி' கொழும்பிலுள்ள 22 நாட்டு தூதரங்களுக்கும், சர்வதேசதொண்டர் நிறுவனங்களுக்கும், பரி. பாப்பரசரின் பிரதிநிதிக்கும் அனுப்பப்பட்ட மகஜர் தொடர்ச்சியாகத் தரப்படுகிறது.)

---

## இராசி பலன்

11 · 08 · 1991

ஞாயிற்றுக்கிழமை

தமிழுக்கு ஆடி 26.
பிரதமை காலை 6-40வரை.
துதியை பி. இ. 4-53 வரை.
மகம் மு. இ. 7-39 வரை.
மரணயோகம்.
இராகுகாலம் மாலை 4-34 முதல் 6-04 வரை
சுபநேரம் காலை 9-04 முதல் 10-34 வரை.

மேடம்: கவனக்குறைவு, வீண்பயம், உடல் உபாதை.
இடபம்: தொழில் மந்தம், நண்பர் பகை, பயண துன்பம்.
மிதுனம்: மித்திரர் நட்பு, காரியசித்தி, தொழில்லாபம்.
கடகம்: வெற்றி வாய்ப்பு, மனக்குறை, குடும்ப அலைச்சல்.
சிங்கம்; கல்வி ஞானம், குடும்ப மகிழ்ச்சி, சுபகாரியம்.
கன்னி; வாக்கு கலகம், தொழில்சிக்கல், ஞாபகமறதி
துலாம்: இனசன வரவு, புத்திரர் மகிழ்ச்சி, வாக்கு வன்மை.
விருச்சிகம்: அதிகாரம், பெண்உதவி, சகோதர பகை.
தனுசு: பழைய பிரச்சனை, குடும்பசெலவு. வீண்விரோதம்.
மகரம்: மயக்க நிலை, மனைவியால் துயர், யோசனை.
கும்பம்; திருமணயோகம், தொழில் லாபம், விரும்பிய மாற்றம்.
மீனம்: காரியபலிதம், பண வரவு, அறிஞர்சந்திப்பு.

- ஜோஸ்யர்

---

## பிளாஸ்ரிக் படகு பறிமுதல்

(சென்னை)

இராமேஸ்வரம் அருகில் நேற்று முன்தினம் அதிகாலை மோட்டார் பிளாஸ்ரிக் படகு ஒன்றையும், மூன்று மோட்டார்ப் படகு இயந்திரங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

---

## திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் கோயில் கதவு உடைக்கப்பட்டு, பெறுமதியான பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன:

ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு, சுவாமியின் அங்கிகள், வேட்டி, சேலைகள், கத்தி, வாள் போன்றவை திருடர்களால் களவாடப்பட்டுள்ளன. (154)

★ ★

[கொழும்புத்துறை]

யாழ். திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்றில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடை உடைக்கப்பட்டு அங்கு இருந்த லக்ஸ்பிறே மாப் பெட்டிகள், சீனி, அரிசி, மா போன்ற பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன. [154]

★ ★

[பூநகரி]

பூநகரிப் பகுதியில் இரவு நேரத்தில் கடைகள் உடைக்கப்பட்டு. பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

வாடியடியில் உள்ள இரண்டு கடைகளிலும், சித்தங்குறிச்சியில் ஒரு கடையிலும் திருட்டுகள் நடைபெற்றுள்ளன. [23]

---

## சைக்கிள் திருடர் கைது

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் பூட்டப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருடிய நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமையன்று கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பண்டத்தரிப்புப் பிரதேச அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டார். (72)

---

## ஒய்வூதியம்

கொழும்பு]

விவசாய ஓய்வூதிய திட்டத்தில் 1,15,000 விவசாயிகள் அங்கத்தவர்களாக சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பல பாகங்களிலுமிருந்து விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

## குளங்களை புனரமைப்பதன் மூலம் விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாம்

(சித்தன்கேணி)

கிராமத்தின் தேவைகளும் மக்களின் தேவைகளும் கிராம சேவை அதிகாரிகள் மூலமே நிறைவேற்றப்படுகின்றன. குளங்களை புனரமைப்பதன் மூலம் எமது பகுதி மக்களின் விவசாயத்தை அபிவிருத்தி செய்துகொள்ளமுடியும். ஆதலால் ஒவ்வொரு கிராம சேவை அதிகாரிகளும் தத்தமது பகுதிகளிலுள்ள குளங்களின் சகல விபரங்களையும் அறிந்திருக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் திரு எஸ். சிவசாமி குறிப்பிட்டார்.

தொல்புரம் கமநலசேவை நிலையத்தில் குளங்களை புனரமைப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது

திரு. எஸ். சிவசாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவை அதிகாரிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

இந்த நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள குளங்களின் விபரங்களும் கிராமசேவை அதிகாரிகள் மூலம் திரட்டப்பட்டு, புனரமைக்கப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ். மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. யோகராசா அவர்களும் கருத்துரையாற்றினர். (137)

---

## பருத்தித்துறையில்பெண்கள் சாரணீய அமைப்பு

[பருத்தித்துறை]

பருத்தித்துறை புற்றளை மகாவித்தியாலயத்தில் பெண்கள் சாரணீய அமைப்புகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பெண்கள் சாரணீய மாவட்ட ஆணையாளர் செல்வி சி. அருள்நந்தி வட்டார ஆணையாளர் திருமதி ஜோர்ஜ் அருட்பிரகாசம் ஆகியோர் இதை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இப்பெண்கள் சாரணீயப் பிரிவின் பெண்கள் சாரணீய அமைப்பில் 35 மாணவிகளும் சிறுதோழர் அமைப்பில் 20 மாணவிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பெண்கள் சாரணீய அமைப்பின் பொறுப்பாசிரியையாக செல்வி செல்வரஜனி செல்வத்துரையும்சிறுமி தோழர் அமைப்பின் பொறுப்பாசிரியையாக செல்வி வினித்த சந்தியாப்பிள்ளையும் செயற்பட்டுவருகின்றன.

அங்குரார்ப்பணக் கூட்டத்திலே மாவட்ட ஆணையாளர் செல்வி சி. அருள் நந்தியும், வட்டாரஆணையாளர் திருமதி ஜோர்ஜ் அருட்பிரகாசமும் சாரணீயத்தின் நோக்கம் செயற்பாடுகள், பயன்பாடுகள், நிர்வாக முறைகள் பற்றி மிக விரிவாக எடுத்துரைத்தனர். (52)

---

## வான் சாரதி கைது

(சென்னை)

தீவிரவாதிகளுக்கு உதவினர் என்ற சந்தேகத்தின் பேரில் திருச்சியை அடுத்துள்ள முத்தரசன் நல்லூரைச் சேர்ந்த வான் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சாரதி ஏற்கனவே திருச்சியில் கைதுசெய்யப்பட்டுள்ள ஹோமியோபதி வைத்தியரின் நெருங்கிய நண்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்த குடும்பங்களது உலர் உணவு விநியோகம் தொடர்பான உதவி அரசாங்க அதிபர்களது கலந்துரையாடலொன்று நாளை திங்கட்கிழமை 12-ம் திகதி காலை 10 மணிக்கு யாழ் செயலக கேட்போர் அரங்கில் நடைபெறும்.

---

## குவைத்திலிருந்து திரும்பிய இலங்கையருக்கு 2500டாலர் உதவி

(கொழும்பு)

குவைத்திலிருந்து திரும்பிய 74,000 இலங்கையருக்கு 2500 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவிருக்கிறது.

வளைகுடா யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஐக்கியநாடு சபை நிறுவியுள்ள நஷ்டஈடு நிதியிலிருந்து இந்த நிதி வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை தொழில் அமைச்சர் எம். பிரேமசந்திரா மேற்கொண்டிருடபதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

## நீதிமன்ற காவலில் முருகன், நளினி

[சென்னை]

ராஜீவ் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டிருக்கும் முருகன், நளினி ஆகியோரை அக்டோபர் 7ம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிபதி எஸ். சிப்திக் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் இதுவரையும் காவல்துறையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் கைது செய்யப்பட்டுள்ள திருத்துறைபூண்டியைச் சேர்ந்த ஜெகதீசனையும் நீதிமன்றக் காவலில் வைக்கும்படியும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

### ★ இலங்கை இராணுவத்தில்
# போரிடும் படையணியாக
# 25பிரிவு; 31,250 துருப்பினர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் தற்போது 'போரிடும் படையணி' 25 ஆக அதிகரிக்கப்பட்டதுடன் இதில் 31,250 படையினர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்பு இப்படையணி 20 ஆக இருந்தது. ஒரு போரிடும் படையணியில் 1,250 பேர் இருப்பார்கள். இம்மாத இறுதிக்குள் இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுவிடும்.

ஆனையிறவு முற்றுகைக்கு முன் 5 ஆயிரம் படையினர் அவசரமாக தெரிவு செய்யப்பட்டு ஒன்றரைமாத காலத்துக் குப்பயிற்சி வழங்கப்பட்டது. புதிதாக 5போரிடும்படையணியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது, தற்போது போரிடும் படையினரின் எண்ணிக்கை 31,250 ஆக இருக்கும். இதைவிட மேலதிகமாக உதவிப்படையையும் தொண்டர்படையையும் சேர்த்தால் 65 ஆயிரமாக இராணுவத்தின் தொகை இருக்கும்.

1987 வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் சமயத்தில் இலங்கை இராணுவத்திடம் 7 போரிடும் படையணிமட்டுமே இருந்தது. [153]

## புலிகளுக்கு மருந்து விற்ற
# வியாபாரி கைது

[சென்னை]

விடுதலைப்புலிகளுக்கு மருந்துகள் விற்பனைசெய்ததாக திருச்சியில் வியாபாரி ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

திருச்சிப் பகுதியில் பற்றுச்சீட்டின்றி 4 நாட்களில் புலிகளுக்கு சுமார் 2 லட்சம்ரூபாவுக்கு மருந்துகளை விற்றதாகவும் இவர்மேல் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட டாக்டர் கோபாலகிருட்ணனுக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## உலர் உணவு நிறுத்தம் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வட பகுதிக்கான உலர் உணவு நிறுத்தப்பட்டுள்ளது பற்றி ஆராய்வதற்கும் இதனால் ஏற்படப்போகும் தாக்கம், அதைச் சமாளிப்பதற்கு மக்களால் அணுகக்கூடிய வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடலொன்று இன்று பிற்பகல 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறும். இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுமாறு சகல பொதுஸ்தாபன அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுநலச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

## காரைநகரில் பஸ் சேவை

(கொழும்பு)

காரைநகரில் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. இந்த உள்ளூர் பஸ்சேவையில் கடற்படையினரே பயணம் செய்துவருகின்றார்களாம்.

இதேவேளை காரைநகருக்கு உணவு விநியோகத்திற்கென கப்பலில் உணவுப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளதாம். [சி]

## பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

வடபகுதிக்கு கொண்டுசெல்வதற்கு தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்துச்செல்வதற்கு லஞ்சம் வாங்கியதாக வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இரு அதிகாரிகள் உட்பட 9 இராணுவப் பொலிசாரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வி)

### புலிகளின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுங்கு குழிகளிலிருந்து தாக்கி வருகிறார்கள். இத்தாக்குதலில் குறைந்தது 500க்கு மேற்பட்ட புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதேவேளை முகாமின் வடக்குப் பக்கமாக 300க்கு மேற்பட்ட புலிகள் வலுவான காப்பரண்கள் வழியே நின்று தாக்கி வருவதனால், ராணுவ முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது என்றார்.

தற்போது முகாமின் வடக்கு, தெற்கு பகுதிகளில் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. [பூ]

### இந்தியாவுடன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

டாடா நிறுவனத்தின் பஸ்கள், லொறிகள், மின்சார உபகரணங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்ததின்மூலம் இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. [மா]

### மலையகத்தில்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி 15பேருக்கும் புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கலாமென பொலிசார் தெரிவித்துள்ளனர். (153)

### 14 படையினர்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தரப்பு அறிக்கைகளின்படி 60 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் 200 க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்துமுள்ளனர் [சி]

### 'ராவய' சிங்கள
(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தையும் ஆட்சேபித்து கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் பலர் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

மேற்படி விடயம் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சரும், பிரதம மந்திரியுமான திரு. டி. பி. விஜயதுங்கா பதிலளிக்கையில்

''ராவய'' பத்திரிகை காரியாலயத்தை பொலிஸார் முறைப்படியே சோதனையிட்டதாகவும் இதுசம்பந்தமாக கல்கிசை நீதிமன்றத்தின் அனுமதியை பெற்ற பின்பே பொலிஸார் சோதனையிட்டதாகவும் பொலிஸாரின் சோதனையின் போது, பல முக்கிய தஸ்தாவேஜுகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். (வி)

### புரன்ட்லேன்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அண்மையில் அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து இனப்பிரச்னை தீர்விற்காகப் புதிய திட்டமொன்றையும் தயாரித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது ராஜீவின் கொலையுடன் அது பின் தள்ளப்பட்டதும்தெரிந்ததே. (சி)

### யாழ். வந்த
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரகமும் முயற்சிகளை மேற்கொண்டுவந்தது. எனினும் இதனை இலங்கை அரசு தடுத்துவிட்டது.

இந்த உணவுப்பொருட்களை கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள அகதிகளுக்கு வழங்குமாறும் இதனைப் புனர்வாழ்வு அமைச்சிடம் ஒப்படைக்குமாறும் சுங்கப்பகுதிக்குஅரசு உத்தரவிட்டுள்ளது. (153-சி)

### படையினருக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கில் படும் பல இன்னல்களையும் இந்நாடகம் சித்தரிக்கிறது. படையினருக்கு மேலும் ஆதரவு திரட்டவே இந்த நாடகம் தொடர்ச்சியாக மேடையேற்றப்படுகிறது. [153-சி]

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பரமானந்தன்
[ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்]

பண்டத்தரிப்பு வடலியடைப்பை பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரமானந்தன் [ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்] 10-08-91 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரை அன்னம்மாவின் அன்பு மகனும், சிவயோகமலரின் அன்புக் கணவரும், தமயந்தி [கனடா], சுமதி, பார்த்தீபன், [கனடா], ஜெயந்தி, சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இந்திரநாதனின் [கனடா] மாமனும், சரஸ்வதி, விஜயராணி, விஜயரத்தினம் ஆகியோரின் சகோதரரும், பத்மநாதன், பஞ்சரத்தினம், கிருஷ்ணமூர்த்தி, சிவலிங்கநாதன், ரங்கநாதன், சிவனேசமலர், சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் ஊரெழு வடக்கு சுன்னாகம் ரோட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் [ஆனந்தகம்] இன்று பிற்பகல்(11-08-91) 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பொக்கனை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

[சி 5100]

## புலிகள் நடமாட்டம் பற்றி விசாரிக்க கோரிக்கை

(சென்னை)

''தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம்பற்றி நீதிவிசாரணைக்குழு ஒன்றை தமிழ்நாடு அரசு உடன் நியமிக்கவேண்டும்.'' என்று தமிழக காங்கிரஸ் (ஐ) தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி கேட்டுள்ளார்.

சென்னையில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி பேசுகையில் கூறியதாவது:

விடுதலைப் புலிகளுக்கும், தி. மு. க. வுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்துவந்துள்ளது என்பது தற்போது தெரியவந்துள்ளதாகவும் கூறினார்.

### அச்சுவேலி தெற்கில்
## இரவில் நடமாடும்
# மர்ம மிருகம்

[அச்சுவேலி]

அச்சுவேலி தெற்குப் பகுதியில் அடையாளம் காணப்படாத மிருகம் ஒன்றின் நடமாட்டம் மக்களை அச்சமடையச்செய்துள்ளது.

இரவில் மட்டும் நடமாடும் இந்த மிருகத்தினால் கடியுண்டு ஒரு வாலிபர் படுகாயமடைந்துள்ளார். வளர்ப்பு நாய் ஒன்றும் கடித்துக்கொல்லப்பட்டுள்ளது. பல கோழிகளும் கொல்லப்பட்டுள்ளன.

இரவுவேளையில் நடமாடும் இந்த மிருகத்தினால் அச்சுவேலி தெற்குப் பகுதிமக்கள் இரவில் நடமாடத் தயங்குகின்றனர். (74)

### ● இம் மாதம் 31ம் திகதி
# ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

[கொழும்பு]

ஆங்கில ஆசிரியர்கள் தெரிவுப் பரீட்சை இம்மாதம் 31ம் திகதி நாடுமுழுவதிலும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு 67,000 பேர் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கிலும்இப்பரீட்சையை நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-153)

## கிட்டுவை வெளியேற்ற இதுவே காரணம்?

(கொழும்பு)

புலிகளின் செய்தித்தொடர்புகள் பிரித்தானிய அதிகாரிகளால் ஒட்டுக்கேட்கப்பட்டதாகவும் இதன் மூலமே திரு. கிட்டுவை வெளியேற்ற பிரிட்டன் முடிவுசெய்ததாக 'இந்து' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு, லண்டன் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கிடையில் புலிகள் பரிமாறிக்கொண்ட ரகசியத்தொடர்புகள் பிரித்தானிய அதிகாரிகளால் ஒட்டுக்கேட்கப்பட்டதாம்.

இதன் காரணமாகத்தான் லண்டனிலிருந்து கிட்டுவை வெளியேற்றும் முடிவை பிரித்தானிய அரசு மேற்கொண்டதாகவும் 'இந்து' மேலும் தெரிவித்தது.

# 200 பயணிகள்
## வவுனியா சென்றனர்

[யாழ்ப்பாணம்]

கடந்த ஒரு மாதத்துக்குப் பின் தாண்டிக்குளத்தை கடந்து இருநூறு பேர் வடபகுதியிலிருந்து வவுனியாசென்றுள்ளனர்.

ஆனையிறவில் இடம்பெற்ற சண்டையை அடுத்து சுமார் ஒருமாதகாலம் வவுனியா-யாழ். போக்குவரத்துச்சேவை துண்டிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து இருநூற்றுக்குமதிகமானவர்கள் வவுனியா சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

### மன்னிப்புச் சபை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதத்திலிருந்து 10,000 பேர் வரை காணாமல் போனதை மன்னிப்பு சபை ஆதார தரவுகளுடன் வெளியிட்டுள்ளது. [153 – சி]

### இலங்கைப்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னை தீரமுன் அகதிகளை திருப்பி அனுப்ப இந்தியா தயக்கம் காட்டிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

### கிட்டு விவகாரம்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கிட்டுவை வெளியேற்ற பிரிட்டன் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு இந்திய அரசே காரணமென லண்டன் பத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளதையடுத்தே இந்திய தூதரகம் இதனை மறுத்துள்ளது.

திரு. கிட்டுவின் வெளியேற்றத்திற்கு இந்தியாவின் தூண்டுதலே காரணமாயிருக்கலாமென பி. பி. ஸி. ஏற்கனவே தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number D/[illegible]/81